செ.வெ.எண் : 39/ ஆகஸ்ட் நாள் : 18.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## தமிழ்நாடு சீருடைப் பணியாளர் பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளுக்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நடத்தப்பட்ட இலவச பயிற்சி வகுப்பில் பயின்ற 51.6% நபர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் சார்பாக, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் இரண்டாம் நிலைக் காவலர், சிறைக்காவலர் மற்றும் தீயணைப்போர் பதவிகளுக்காக நடைபெற்ற இலவச பயிற்சி வகுப்பில் பயின்ற 120 மாணவர்களில் 62 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் சார்பாக, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் இரண்டாம் நிலைக் காவலர், சிறைக்காவலர் மற்றும் தீயணைப்போர் பதவிகளுக்காக நடைபெற்ற இலவச பயிற்சி வகுப்பில் பயின்ற 120 மாணவர்களில், 21.05.2017 அன்று நடைபெற்ற எழுத்து தேர்வில் 62 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாவட்ட அளவில் இலவச பயிற்சி அளிக்கப்பட்டதில், இத்தேர்ச்சி விகிதம் (51.6%) மதுரை மண்டல அளவில் முன்னிலையில் உள்ளது. மேலும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) தொகுதி -I முதனிலை (Preliminary) தேர்விலும் 7 நபர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**